## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2014

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம் 01**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பன விசேட சந்தர்ப்பத்தின் போது தவிர ஈடுசெய்யப்பட முடியாத போதிலும், மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 36,220,884 தொகையான வருமானத்திலிருந்து ரூபா 14,694,860 தொகையான செலவினங்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய மீதி ரூபா 20,383,184 வருமானமாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வருமான மூலம் பொருண்மையாக இருக்கையில் நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், உயர் சான்றிதழ் பத்திர பாடநெறியிலிருந்து கிடைத்த ரூபா 1,229,401 ஆன வருமானம் தொழில்நுட்ப பாடநெறி வருமானத்திலும், மருத்துவ பரிசோதனைக்காக கிடைத்த ரூபா 1,424,000 ஆன வருமானம் மற்றும் தேசிய தொழில்தகைமை பாடநெறி நியமங்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ரூபா 1,474,533 வருமானம் ஏனைய ஒப்பந்த செயற்பாடுகளிலிருந்து கிடைத்த வருமானத்திலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தால் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது திறைசேரியிடமிருந்து மூலதனச் செலவினத்தை மேற்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்த ரூபா 16,151,975 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிடமிருந்து மீள்நிரப்பப்பட வேண்டிய நிறுவனத்தால் செலவிடப்பட்ட ரூபா 3,115,432

தொகையான மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 2,387,532 தொகையான மீண்டுவரும் செலவினம் பெறவேண்டிய தொகையாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,813,827 ஆன நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,728,741 ஆக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கொண்டு வரப்பட்டிருந்ததுடன், ரூபா 10,000 ஆன சில்லறைக்காசு மீதி விடுபட்டிருந்தது. ஆதலால் காசுப் பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 பிரிவு | நிறுவகத்தினால், நிறுவகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்று தயாரித்து குறித்த ஆண்டிற்கு பின்னர் வரும் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கான அவ்வறிக்கை கணக்காய்வு திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| 11 ஆம் பிரிவு | நிறுவகத்தின் மிகை நிதியினை, நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான மீதி ரூபா 3,032,877 ஆக இருந்தது. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | நிறுவகத்தினால் கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தினால் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டிற்காக பதவியணியினருக்கு ரூபா 397,602 தொகை ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 19,441,777 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,722,049 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,719,728 ஆன முன்னேற்றமொன்றைக் காட்டியது. மிகையில் அதிகரிப்பிற்கு அரசின் மானியம் ரூபா 8,990,316 ஆலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 2,270,588 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்னமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு செலுத்துவதற்காக அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஈடி 58 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் இந்நிறுவனம் குறித்த வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது நிறுவகம் நடாத்திச் செல்லப்படும் அமைச்சிற்குரிய கட்டிடத்தை உரித்தை நிறுவகத்திற்கு கையேற்கவோ அல்லது வாடகை கொடுப்பனவு தொடர்பாக அமைச்சுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் 03 சான்றுப்பத்திர பாடநெறிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பாடநெறிக்கு விண்ணப்பித்த மற்றும் திருப்திகரமாக பூர்த்தி செய்த சான்றிதழ்களை உரித்தாக்கிக் கொண்டவர்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் பாடநெறிகளை நிறைவுசெய்து சான்றிதழ்களை உரித்தாக்கிக் கொண்டவர்களின் சான்றிதழ்களை உறுதிப்படுத்துவது சிக்கலாக இருந்தது.

(ஈ) பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பதவிக்காலம் 2015 மார்ச் 21 ஆந் திகதி பூர்த்தியடைகின்ற போதிலும், அவ்வங்கத்தவர்கள் 2014 நவம்பர் 25 ஆந் திகதியின் பின்னர் நிர்வாக சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்திருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் முகாமைத்துவம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன், தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும். இதன் பிரகாரம் காணப்படும் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வெற்றிடங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளின் போதும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தின் சில பிரிவுகளின் நடவடிக்கைகள் இவ்வெற்றிடங்களை நிரப்பாமையால் செயற்பாடற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்தியவசியமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு

நடவடிக்கை எடுக்காமையால் நிறுவகத்தின் நோக்கத்தை உரிய வகையில் நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படக்கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் மூலம் பௌதீக இலக்குகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், நிதி இலக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தின் மதிப்பிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 31 சதவீதத்திலிருந்து 515 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு